IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 159/2012

Deposition of witness for LW1 as DW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | லோகமூர்த்தி | Caste | : | |
| Father Name | : | ஆறுமுகம் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of July, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய வாக்குமூலத்தை வழக்கறிஞர் அலுவலகத்தில் என்னுடைய வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை என்னால் வயது மூப்பின் காரணமாக வார்த்தைகள் சரியாக வராததினால் நான் பிரமாண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன்.

2. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பு வந்தது அதனால் சாட்சி சொல்ல வந்தேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. 24.07.2025 அன்று நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் சொல்ல எனக்கு அழைப்பாணை வந்தது. என்னுடைய மகளின் சார்பாக அதாவது 1ம் பிரதிவாதி சார்பாக சாட்சியம் சொல்ல அழைப்பாணை வந்தது. நானும் என்னுடைய மகளும் நல்ல பேச்சு வார்த்தையில்தான் உள்ளோம். இன்றைக்கு என் மகள் நீதிமன்றத்தில் வரவில்லை. 24.07.2025 அன்று நீதிமன்றத்திற்கு வந்தார்களா என்றால் வரவில்லை. நான் தான் வந்ததேன்.

3. 24.07.2025 தேதிக்கு முன்பு என்னுடைய பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. 24.07.2025 தேதி அன்று நீதிமன்றத்திற்கு வர சொல்லி அழைப்பாணை வந்தபோது அதற்கு முன்பு நான் ஏன்

வழக்கறிஞரை சந்தித்தேன் என்றால் எனக்கு ஞாபக மறதி மற்றும் நீதிமன்றத்தில் என்ன சொல்ல வேண்டும் என்று தெரியாததால் வழக்கறிஞரை சந்தித்தேன். நான் என் மகளிடம் நீதிமன்றத்தில் இருந்துதான் அழைப்பாணை வந்தது நான் ஏன் வழக்கறிஞரை சந்திக்க வேண்டுமென்று கேட்டேனா என்றால் வழக்கறிஞரை போய் சந்தியுங்கள் அதன்பிறகு நான் வருகிறேன் என்று என் மகள் கூறினாள். அப்பொழுது என் மகள் என்னுடன் வரவில்லை.

4. நான் 24.07.2025 அன்று வழக்கறிஞரை நீதிமன்றத்தில்தான் பார்த்தேன், அவருடைய வீட்டிற்கு நான் செல்லவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை 24.07.2025 அன்றுதான் நீதிமன்றத்தில் கொடுத்தேன். அதற்கு முன்பாக நான் அவரை போய் பார்க்கவில்லை. 05.03.2025 அன்று தான் நான் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று நான் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதன்படி நீதிமன்றத்தில் ஆஜரானேன்.

5. 05.03.2025 அன்று என்னுடன் வேறு சாட்சியம் யாரும் வரவில்லை. என் மகள் சார்பாக எத்தனை சாட்சி மற்றும் யார்யார் சாட்சியாக விசாரிக்க போகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்யும்போது ஏதேனும் ஆவணத்தை பார்த்து தயார் செய்தானா என்றால் இல்லை.

6. என்னுடைய மகள் அவருடைய வாக்குமூலத்தில் என்ன குறிப்பிட்டுள்ளாரோ அதையே நான் குறிப்பிட்டு வாக்குமூலம் தயார் செய்தேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் என் மகளிடம் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். இன்றைய தேதிவரை அசல் ஆவணங்கள் அந்த அம்மாவிடம்தான்

உள்ளது என்று சொன்னால் சரிதான்.

7. தாவா சொத்து என்னுடைய மகளுக்கு தான் உரிமை என்று பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை ஆனால் தண்ணீர் மற்றும் மின்சார வரி, வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய மகள் பெயரில் மேற்கண்ட வரி ரசீது வருவதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்று சொன்னால் என் பெயரில் இருந்தது. என் பெயருக்கு பின்பு என் மகள் பெயருக்கு மாற்றப்பட்டதா என்று சொன்னால் சரிதான் . 2007 ஆம் ஆண்டு என் பெயரில் மேற்படிரசீது இருந்தது. மேற்படி ரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பெயரில் இருந்து என்னுடைய மகள் பெயருக்கு மாற்றப்பட்ட உண்டான அனுமதி நான் வழங்கியுள்ளேனா என்றால் அப்படியெல்லாம் அனுமதி எதும் இல்லை.

8. சாந்தா ராணி என்னுடைய உடன் பிறந்த சகோதரி. அவர்கள் எங்கள் ஊரிலேயே சத்துணவு ஆசிரியராக இருந்தார். அவர்கள் என்னுடைய வீட்டிலேயே கூட்டு குடும்பமாக வசித்தார்கள். 2011 வரை தாவா சொத்தில் வாதி உட்பட இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 53 வரை உள்ள ஆவணங்கள் சாந்தா ராணி காலத்திற்கு வாதிகளால் செலுத்தப்பட்ட தாவா சொத்துக்கு உட்பட்ட ரசீது என்று சொன்னால் சரிதான். சாந்தா ராணி என்னுடைய பெயருக்கோ அல்லது என்னுடைய மகளான முதலாம் பிரதிவாதிக்கோ எங்களுடைய பெயருக்கு தாவா சொத்தை மாற்றிகொள்ளலாம் என்று ஆவணம் ஏதேனும் எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை.

9. கொல்லாபுரி அம்மாள் அதாவது என்னுடைய தாயார் நான்தான் தாவா சொத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. தாவா சொத்தினுடைய அன்றைய மதிப்பு ரூபாய் 5 லட்சம் இன்றைய மதிப்பு சுமார் ரூபாய் நாற்பது ஐம்பது லட்சம் இருக்கும். என்னுடைய மகள் தாவா சொத்தின் மதிப்பை பற்றி சொல்லவில்லை. தாவா சொத்தின் விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் பழைய கதவு எண்.3/55, புதிய கதவு எண்.4/55 என்று சொன்னால் சரிதான். சேவூரில் உள்ள சாவடி மேட்டு தெருவில்தான் தாவா சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட சொத்தின் கதவு எண்ணை தான் வாதிகள் குறிப்பிட்டுள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

10. மேற்படி கதவு எண் கொண்ட வழக்கு சொத்துக்குதான் வாதிகள் வழக்கு தாக்கல் செய்து சொத்தை ஒப்படைக்க வேண்டி தாக்கல் செய்துள்ளனர் என்று சொன்னால் நான் ஒப்படைக்க மாட்டேன் ஆனால் அவர்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். என் மகளுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்பதற்கு 2012 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் என் மகள் ஏதேனும் தாவா சொத்து அவர்களுக்குதான் உண்டானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை.

11. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் தான settlement சாந்தா ராணி என்னுடைய பெயருக்கு எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது எந்த சொத்திற்கு உண்டானது என்று சொன்னால் தாவா சொத்திற்கு உண்டானது. என்னுடைய சகோதரி என்னுடைய பெயருக்கு தான settlement எழுதி கொடுத்ததன் அடிப்படையில்தான் நான் என்னுடைய மகளுக்கு தாவா சொத்தின்

உரிமையானது என்று கூறிகிறேன் என்று சொன்னால் சரிதான். தான settlement எந்த தேதி மாதம் மற்றும் ஆண்டில் எழுதி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சார்வு நீதிமன்றத்தில் OS.NO.358/2010 என்ற வழக்கை வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

12. மேற்படி வழக்கானது என்னுடைய தந்தை சொத்துக்காக நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் பதிவு செய்யப்பட்ட settlement பத்திரத்தை அதாவது என்னுடைய சகோதரி எனக்கு எழுதி வைத்த settlement பத்திரத்தை என் மகளிடம் கொடுத்து நீதிமன்றம் தாக்கல் செய்ய சொன்னேனா என்றால் இல்லை. இன்றைய தேதியபடி என்னுடைய மகளுக்கு settlement பத்திரத்தின் விவரம் தெரியும்.

13. மேற்படி settlement பத்திரத்தில் குப்புசாமி என்பவரும் ராதாகிருஷ்ணர் என்பவரும் மற்றும் ரேணு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். அழைப்பாயை பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கொண்டுவர சொல்லி குறிப்பிடப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள settlement பத்திரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். இந்த தாக்கல் செய்வதற்கு முன்வு எனக்கும் என் மகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது அதற்கு நாங்கள் பதில் அழைப்பு ஏதேனும் கொடுத்தோமா என்றால் இல்லை.

14. வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு மேற்படி சாந்தா ராணி தான settlement பத்திரத்தை எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை அப்போது நான் அவரை பார்க்கவில்லை. நான் அவர்களை

அப்பொழுது பார்க்காததற்கு காரணம் தகரகுப்பத்திற்கு அவர்கள் பணிமாற்றம் செய்யப்பட்டார்கள். எனக்கும் அவருக்கும் எத்தனை வருடம் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 26.04.2004 ஆம் ஆண்டு என்னுடைய மகளான முதல் பிரதிவாதிக்கும் 2ம் வாதிக்கும் திருமணம் நடந்ததற்கு திருமணம் பத்திரிக்கை அல்லது திருமண போட்டோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடை மகள் சந்திரன் என்பவரை திருமணம் செய்துகொண்டு அவருக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர் என்று சொன்னால் சரிதான். அதேபோல் 2ம் வாதிக்கும் திருமணம் நடந்து அவர்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் உள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

15. என்னுடைய மகளுக்கு எந்த வருடம் சந்திரனிடம் திருமணம் நடந்தது என்று சொன்னால் ஞாபகம் இல்லை. சாந்தா ராணியிடம் சந்திரனுடன் என் மகளுக்கு திருமணம் செய்து வைக்கப்போகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அப்போது அவர் இல்லை இறந்துவிட்டார். பஞ்சாயத்தில் பேசி முடிவு பண்ணியதால்தான் தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பஞ்சாயத்து நடந்த தேதி மாதம் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

16. 1997ல் இருந்து 2010 வரை நான் திருவண்ணாமலையில்தான் வேலை செய்து வந்தேன் வழக்கு தாக்கல் செய்ய வந்தேன். நான் திருவண்ணாமலையில் வீடு வாடகை எடுத்து இருந்தேன். 2010 ஆம் ஆண்டு எனக்கு ஓய்வு தேதி என்பதால் அதன் பிறகு இங்கு வந்துவிட்டேன். என் மகள் சொல்லியுள்ள அக்கு விடுதலை பத்திரத்தைதான் நான் settlement பத்திரம் என்று சொல்லுகிறேன் என்று

சொன்னால் சரிதான் . மேற்படி அக்கு விடுதலை பத்திரத்தை நானும் என் மகளும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் . 2000 லிருந்து 2012 வரை சேவூரில் கிராம அலுவலர் யார் எனும் விவரம் எனக்கு தெரியாது.

17. எனக்கு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் கூட சாவடித்தெரு என்றுதான் குறிப்பிட்டுள்ளது தவிர கதவு எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை பொருத்தவரை உரிமையாளர் வாதிகள்தான் என்றாலும் அதனால் தாவா சொத்தை அவர்களிடம் நான் ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த EXB10 ஆன ஆதார் ஆவணத்தில் தாவா சொத்தை குறித்த முகவரி இல்லை என்று சொன்னால் சரிதான். EXB1 முதல் EXB9 வரை உள்ள ஆவணங்கள் முன்னிலைக்கு என் மகள்தான் உரிமையாளர் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2ம் வாதியை பற்றி அவருடைய நன்னடத்தை பற்றி குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறு என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI